தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 6

ந.க.எண்.34472/என்1/இ1/2020 நாள் 18.11.2020

பொருள் - பள்ளிக்கல்வி - நீதிமன்ற வழக்குகள் - நிலுவை - உரிய காலத்தில் நீதிமன்ற விதிமுறைகளைப் பின்பற்றி எதிர்வாதவுரை, மேல்முறையீடு, சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்தல்— காலதாமதம் தவிர்த்திட அறிவுரைகள் வழங்குதல்— தொடர்பாக.

பார்வை - சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழக்கு CMP (MD) எண்.2892/2020 in WA (MD) SR எண். 67917-ல் 29.10.2020 மற்றும் 06.11.2020 நாளிட்ட இடைக்காலத் தீர்ப்பாணைகள்

பள்ளிக்கல்வித்துறையில் அரசு முதன்மைச் செயலர், ஆணையர், பள்ளிக்கல்வி இயக்குநர் ஆகியோரை பிரதிவாதிகளாக சேர்த்து நீதிமன்ற வழக்குகள் தொடரப்படுகின்றன. நீதிமன்ற வழக்குகளை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனுக்குடன் ஆய்வு செய்து எதிர்வாதவுரை, மேல்முறையீடு, சீராய்வு மனு போன்றவற்றை தயார் செய்து உரிய காலத்தில் தாக்கல் செய்யாத காரணத்தால் அரசிற்கு நிருவாகச் சிக்கல்கள் உருவாகும் நிலை ஏற்படுகிறது.

பார்வையிற்காணும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் இடைக்காலத் தீர்ப்பாணையில் காலதாமதமாக மேல்முறையீடு தாக்கல் செய்த அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு, அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது அனைத்து ஆய்வு அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரைக் கிளையில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணைகள் உடனுக்குடன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதால், குறிப்பிட்ட நாள்களுக்குள் அவற்றைப் பதிவிறக்கம் செய்து, நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் அரசாணைகளின் அடிப்படையில் ஆய்வு செய்து நடைமுறைப்படுத்திடவோ அல்லது சட்டக்கருத்து பெற்று உடன் உரிய காலத்திற்குள் சீராய்வு மனு/மேல்முறையீடு/சிறப்பு விலக்கல் மனு தாக்கல் செய்திடவோ வேண்டும். மேலும், நீதிமன்றத் தீர்ப்பாணை கிடைக்கப்பெறவில்லை என்று காரணம் காட்டி தாமதப்படுத்திடக் கூடாது என்றும் அவ்வாறு காலதாமதம் ஏற்படுத்தும் அலுவலர்கள் மீது விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலக/மாவட்டக் கல்வி அலுவலக அளவில் சட்டப்படிப்பு பயின்ற ஒரு பணியாளரை தற்காலிக ஏற்பாடாக நியமித்து வருவாய் மாவட்ட/கல்வி மாவட்ட அளவில் வழக்குகள் ஒருங்கிணைப்பாளராக செயல்படும் வகையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக்கல்வி இயக்குநர்

18.11.2020

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்விஅலுவலர்கள்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்

நகல்

அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–6.– தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.